ஆக்கம்: ஆசிரியை T.பேபி ஷாலினி
கே/ சாந்த மரியாள் தமிழ் மகா வித்தியாலயம்

**பின்வரும் உரைப்பகுதிகளை வாசித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

உச்சி வெய்யில் உடலை வெப்பமேற்றி முதுகை நனைக்கிறது. மேடு, பள்ளம் என்று சைக்கிள் மிதித்தல் கால் விரல்களில் ஊமை வலி, கையில் கடிதக் கட்டுடன் வியர்வை நொடியோடு, ஊரை வலம் வருகின்றேன் நான். காற்றை யாரோ கடத்திக்கொண்டு போன பிரமையில் மரங்கள் சோகம் சுமக்கிறன. கனவிலும், நினைவிலும் கடிதக்காரனை ஆராதிப்பதில் ஆசுவதும் காணும் புது யுகமிது.

எங்களுக்கு கடிதம் இருக்கியா? பல தடவைகள் செவி மரத்துப்போன கேள்வி தான் இது. என்றாலும் தினமும் வந்து தொலைகிறேன் கடிதங்களோடு. பதிலா கம்பியூட்டர்கள் அறியாத் துடிக்கும். அவசரத் சூடுக்கைகள்,வெளிநாடு போன பார்த்தவை நினைத்து உருகி, கனவுகள் சுமந்த கண்களால் வினா எழுப்பும் ஒற்றை குயில்கள், ஆத்மார்ந்த சிநேகிதனை வரவேற்கும் உச்சாகத்தோடு நெருக்கமாய் ஒட்டிக் கொள்வோர். உறவுமுறை விளித்து காரியத்தை கச்சிதமாய் அறிய விழைவோர்.

இப்படி பல ரகத்தினரை, தினமும் பார்க்கிறேன். அத்தனை முகங்களிலும் பளிச்சிடும் பாவங்கள் எனக்கும் பரிச்சமானவை. இந்த அந்நியமற்ற யதார்த்தத்தில் ஒரு மழலையைப் போல் மனதைப் பறி கொடுக்கிறேன். நிழல் படுத்துறங்கும் குறுகலான செம்மண் பாதை, வெள்ளைப் புறாக்கள் துள்ளிக் குதிக்கும் கலவன் பாடசாலை. விழுது பரப்பி அடர்ந்து செறிந்த ஆலமரம். துல்லியம் துலங்கும் இறை இல்லமாம் பள்ளிவாசல். குச்சில் வீடுகள் மாடி வீடுகள், தேனிர்கடைகள், குப்பை கடதாசிகளைத் தின்று சுவாரசியம் இன்றி செல்லும் கால்நடைகள், இன்னும் செயற்கை முகம் தரிக்காத கிராமத்து புன்சிரிப்புகள்.

1. உரைப்பகுதியில் தபாற்காரனின் மனநிலை எவ்வாறு காட்டப்படுகின்றது?
2. கிராமத்தின் வர்ணிப்பு பற்றிய சித்தரிப்பினை எடுத்துரைக்குக?
3. இப் உரைப்பகுதியில் வெளிப்படும் உவமையணி ஒன்றினை எடுத்துக் காட்டி விளக்குக?
4. தபாற்காரனை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்கள் நடத்தை மற்றும் மனநிலை குறித்த வெளிப்பாட்டினை விளக்குக?
5. காற்றை யாரோ கடத்திக் கொண்டு போன பிரமையில் மரங்கள் சோகம் சுமக்கின்றன.... இவ்வரிகள் வாயிலாக நீர் விளங்கிக் கொள்வது யாது?